LIBRARY
31 DEC
Eastern University

# EASTERN UNIVERSITY, SRI LANKA

# FIRST EXAMINATION IN DIPLOMA IN BUSINESS ADMINISTRATION 1999/2000

## DBA- 1043 ECONOMIC ENVIRONMENT OF BUSINESS

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

நேரம் - 03 மணித்தியாலங்கள்

---

## பகுதி - I

**01.**

1. வளங்கள் என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
2. இலவசப் பொருட்களையும், பொருளாதாரப் பொருட்களையும் வேறுபடுத்துக.
3. பொருளாதார ஆய்வுகளில் எடுத்துக்காட்டப்படும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எவை?.
4. இலங்கை அரசாங்கம் கிழக்குப் பல்கலைக்கழக கல்வி அபிவிருத்திக்காக நிதி உதவி ஒன்றை அளிக்கின்றது. இந்த நிதி உதவி உற்பத்தி சாத்திய வளையியை நகர்த்தும் என நீர் கருதுகின்றீரா.
5. மாறா அளவுத்திட்ட விளைவு என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
6. சந்தைப் பொறிமுறை என்பதனை சுருக்கமாக லிளக்குக.
7. மொத்தப்பயன் எல்லைப்பயன் என்பதனை வேறுபடுத்துக.
8. எல்லை உற்பத்தி எனபதனை சுருக்கமாக விளக்குக.
9. அடிப்படைப் பொருளாதார பிரச்சினை என்பதனை சுருக்கமாக விளக்குக.
10. சமநிலை விலை என்பதனை வரையறுக்குக.
11. Qd = f(p,p-1,c,po,t..........n) இச்சமன்பாட்டினை விளக்குக.

12. பண்ட மாற்றுமுறையின் நான்கு பண்புகளைத் தருக.

13. 1999ம் ஆண்டில் மொதத தேசிய உற்பத்தி ரூ.296,000 Mn ஆகும். இது 2000ம் ஆண்டில் ரூ.310,000 Mn ஆக அதிகரித்தது. ஆனால் இது தலாவருமானத்தை வீழ்ச்சியடையச் செய்தது. இவ்வாறான ஒரு நிலை சாத்தியமாகுமா?

14. குறைந்து செல்லும் விளைவு விதி என்பதனை விளக்குக.

15. சந்தர்ப்பச் செலவு என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? விளக்குக.

(15X2=30)

02) பின்வரும் கூற்றுக்கள் சரியா, பிழையா எனக்குறிப்பிட்டு உமது விடைக்கு காரணங்கள் தருக.

1. தனிப்பட்டவர்களுக்கும், சமூகத்துக்குமான பொருளாதார தெரிவுகளில் எப்பொழுதும் சந்தர்ப்பச் செலவு உள்ளடங்கி இருக்கும்.
2. உற்பத்தி தானத்தினூடாக செல்கின்ற ஒரு நேரான நிரம்பல் கோட்டில் எல்லாப்புள்ளிகளிலும் நெகிழ்ச்சி ஒன்றிற்கு குறைவாகும்.
3. சாதாரண ஒரு கேள்விக் கோடு நுகர்வோன் நடத்தையை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருக்கும்.
4. தேசிய வருமானக் கணிப்பீடுகள் சந்தை விலையில் மட்டுமே கணிப்பிடப்படுகினறது.
5. வெளியீடு மாற்றமடையும் போது சராசரி நிலையான செலவும் மாற்றமடைகின்றது.

(5X2=10)

பகுதி- II

3) a. கேள்வி விதி என்பதனை விளக்குக.

(3 புள்ளி)

b. நிறுவனம் Xன் கேள்விச் சமன்பாடு

$Qd = 1650-40p$

நிரம்பல் சமன்பாடு

$Qs = 350+60p$

LIBRARY
1 DEC 2003
University, Sri La

1.மேலுள்ள நிறுவனத்தின் சமநிலை விலை, தொகை என்பவற்றைக் காண்க.

(4 புள்ளி)

2 விலை ரூ.18 ஆக மாறும் போது சமநிலையில் எத்தகைய மாற்றம் ஏற்படும்?

(4 புள்ளி)

3. விலை ரூ.19ல் இருந்து ரூ.22ற்கு அதிகரிக்கும் போது கேள்வி நெகிழ்ச்சி கணிப்பிடுக.

(4 புள்ளி)

4) பின்வருவனவற்றின் வேறுபாட்டினை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக.

i.சந்தர்ப்பச் செலவு - கணக்கீட்டுச் செலவு

ii.நிலையான செலவு - மாறும் செலவு

iii.சராசரி செலவு - எல்லைச்செலவு (15 புள்ளி)

5) i. வருமான வட்டப்பாய்ச்சல் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது என்ன?

ii தனி நபர் வருமானம், தலாவருமானம் என்பவற்றினை வேறுபடுத்துக.

iii.பொருளாதார வளர்ச்சியை வரைவிலக்கணப்படுத்தி, மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மூலம் பொருளாதார வளர்ச்சி எவ்வாறு அளவிடப்படுகின்றது.என்பதை விளக்குக.

(15 புள்ளி)

i. பணத்தின் முதன்மைத் தொழிற்பாடுகளை விளக்குக.

ii. பணடமாற்று முறையில் உள்ள பிரதி கூலங்களை விளக்குக.

iii. பணச்சந்தைக்கும், மூலதனச்சந்தைக்கும் இடையிலான வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக.

(15 புள்ளி)